# வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா

**நடைமுறைப்படுத்திவரும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்:**

வேலணை மத்திய கல்லூரியில் க. பொ. த. சாதாரண தரம் வரை கல்வி கற்று நல்ல பெறுபேற்றைப் பெறுபவர்களும் ஓரளவு வசதி படைத்தவர்களும் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று விடுவது காலங்காலமாக நடைமுறையிலுள்ள நிகழ்வாகும்.
இதன் காரணமாக எமது கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவு நலிவடைந்து மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளமையினால் வசதியற்ற மாணவர்களுக்கு விஞ்ஞானக்கல்வி என்பது தொடர்ந்து எட்டாக்கனியாகவே உள்ளது.

மாணவர்களை எமது கல்லூரியில் கற்க வைப்பதற்கும் உண்மையிலேயே வசதியற்ற மாணவர்களுக்கு உதவுமுகமாகவும் எமது கல்லூரியின் தரத்தை மேம்படுத்தி விஞ்ஞானப்பிரிவினை வலுப்படுத்துதல் அவசியமாகும். ஆனால் இது எமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயமாகும். இருந்தபோதும் இப்பெரும் கைங்கரியத்தினை நிறைவேற்றும் ஓர் பரீட்சார்த்த முயற்சியாகத் தற்போது விஞ்ஞானப்பிரிவில் கற்கும் வசதியற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பாக (யாழ்ப்பாணம் சென்று ரியூசன் கற்றலுக்கான) நிதியுதவி வழங்குவது அவசியமெனக் கருதி அதற்கான நிதியுதவித்திட்டம் ஒன்றை ஒக்ரோபர் 2012 முதல் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றோம்.

இதில் நாம் முதற்கட்ட வெற்றியையும் பெற்றுள்ளோம் என்பதனை தெரிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமையுமடைகின்றோம். கடந்த வருடம் உதவிபெற்ற 5 மாணவர்களில் செல்வன் நகுலேஸ்வரன் சுதர்மன் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவாகக்கூடிய (B, 2C) பெறுபேற்றைப் பெற்றுள்ளார். இது கல்லூரியின் தற்போதய வரலாற்றில் குறிப்பாக 1992 இடப்பெயர்வுக்குப் பின்னர் நீண்ட காலத்தின் பின்னர் நடைபெற்ற நிகழ்வு மட்டுமல்லக் கல்லூரியின் துரித வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டுமாகும் என்றால் அது மிகையல்ல. இதற்காகச் செல்வன் சுதர்மன் அவர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

இத்திட்டத்தின் மூலம் தற்போது பின்வரும் **6** க.பொ.த உயர்தர வகுப்பு விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் பயன்பெறுகின்றார்கள்.

சிறீகுமரன் கஜனன்
உதயகுமார் கனிஸ்ரன்
மகேஸ்வரன் நிருசன்
சிவகுமார் பவ்ஜா
குமார் துசாந்தினி
கஸ்மீர் லக்சினி

மாணவர் ஒருவருக்கு மாதம் 2000.00 ரூபா வீதம் மாதாமாதம் 12,000.00 ரூபா நிதியுதவியை தற்போது வழங்கி வருகின்றோம். இத்திட்டம் தொடங்கிய ஒக்ரோபர் - 2012 இலிருந்து மார்ச்- 2016 வரை மொத்தம் 4, 484.00 டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது.

*வெற்றிபுரியை அடைவதற்குச் சோதனைபுரத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும்.*

சி. இளஞ்செழியன் (தலைவர் மற்றும் செயற்திட்ட இணைப்பாளர்)
வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா
**31-03-2016**

**பிற்குறிப்பு: புதிய மாணவர்கள் எமது இணையத்தளத்தில் பதிவேற்றஞ் செய்யப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து அதிபர் ஊடாக எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.**




தற்போது (2016) உதவிபெறும் மாணவர்கள் அதிபர் திரு சிவசாமி கிருபாகரன் மற்றும் உயிரியல் ஆசிரியை திருமதி நிருபா அருந்தவம் ஆகியோருடன் நிற்கும் காட்சி

**2014-2015 இல் உதவிபெற்ற 5 மாணவர்கள் பெயர் விபரம்**

லிங்கேஸ்வரன் சுபாஷ்குமார்
நகுலேஸ்வரன் சுதர்மன்
கணேசலிங்கம் வினோத்
கந்தசாமி பிரசாத்குமார்
சுப்ரமணியம் பிரணவன்

**2013-2014 இல் உதவிபெற்ற 5 மாணவர்கள் பெயர் விபரம்**

ஐங்கரன் மயூரிகா
சுப்ரமணியம் பிரணவி
மனோகரலிங்கம் லதாகினி
நவேந்திரன் குகினிசா
சோமசுந்தரம் தனீசன்

**2012-2013 இல் உதவிபெற்ற 9 மாணவர்கள் பெயர் விபரம்**

ஐங்கரன் மயூரிகா
சுப்ரமணியம் பிரணவி
மனோகரலிங்கம் லதாஜினி
நவேந்திரன் குகினிசா
சோமசுந்தரம் தனீசன்
டக்ளஸ் தாரணி
அன்னராசா துஸ்யந்தன்
தர்மராஜேந்திரன் கஜீவன்
ஜோசராசன் கெவின்மேரி

# வேலணை மத்திய கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்-கனடாவினால்

க.பொ.த உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு
2012 ஒக்ரோபர் மாதத்திலிருந்து மாதாந்தம் கல்வி ஊக்குவிப்புப்பணமாக
மாணவர் ஒருவருக்கு ரூபா 2 000 (ரூபா இரண்டாயிரம்) வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.
2013 பெப்ரவரி மாதத்திற்குரிய கல்வி ஊக்குவிப்புப்பணம் வழங்கும் நிகழ்வின் நிழல் படங்கள்



எமது ஓய்வுநிலை சிரேஸ்ட ஆசிரியர் திரு லீனஸ் அவர்கள் கனடா பழையமாணவர் சங்கத்தினரின் இச்செயற்றிட்டத்தை வரவேற்றதுடன் மாணவர்களுக்கு ஆசியும் வழங்கினார்.



பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஸ்ரனிஸ்லஸ் அவர்கள் கனடா பழையமாணவர் சங்கத்தினரின் இச்செயற்றிட்டத்தை வாழ்த்தி உரையாற்றுகின்றார்.













வேலணை பழைய
மாணவர் சங்கத்தின்
உபதலைவர்
திரு.க.பாலகிருஸ்ணன்
அவர்கள் கனடா
பழைய மாணவர்
சங்கத்தினரின்
இச்செயற்றிட்டத்தை
உளம் மகிழ்ந்து
பாராட்டுகின்றார்.





